**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC.No. 902/2022 P.W. 3/L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சுந்தர்சிங் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. ராஜேந்திரன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.05.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது தச்சக்கோடு அழகிய மண்டபத்தில் குடியிருந்து வந்து மரவேலை செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியாது. கடந்த 06.09.2022ம் தேதி நானும் எனது பெரியப்பா மகன் வில்சனும் ஆரோன்பிளைவுட் அருகே பேசிக் கொண்டு இருக்கும் போது ஒரு நாள் முன்பு நடந்த சம்பவம் குறித்து தெரியுமா என்று போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் சம்பவம் பற்றி தெரியும் என்று சொன்னோம். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு எழுதி கொண்டார்கள். போலீசார் எழுதிய ஆவணத்தில் நானும் வில்சன் என்பவரும் கையொப்பம் செய்தோம்.

2. நீதிமன்றதில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகசர் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு முன்பு சாட்சியம் அளித்த அ.சா.1 மற்றும் அ.சா.2 யை எனக்கு தெரியும் என்றால் சரிதான். அழகியமண்டபம் வாகனங்கள் அதிகமாக செல்லும் பகுதி என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் வைத்து ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு

தற்போது அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC.No. 902/2022 P.W. 2/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. அன்னாள் | **Taluk** | : | |
| **Father's Name** | : | க/பெ. ஈசாக் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.05.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது அழகிய மண்டபத்தில் குடியிருந்து வந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியாது. மூன்று வருடங்களுக்கு முன்பு செப்டம்பர் மாதம் 05ம் தேதி மாலை 05.00 மணிக்கு அழகியமண்டபம் சபைக்கு சென்றுவிட்டு திரும்பி அழகியமண்டபம் வந்து பஸ் ஏற நிற்கும் போது ஒரு பைக் வந்து என்னை இடித்துவிட்டது. அதில் எனக்கு வலது கை, தலை மற்றும் வலது காலில் அடிப்பட்டது. அதன் பிறகு தக்கலை அரசு மருத்துவனைக்கு எனது வீட்டிற்கு அருகில் உள்ள நபர்கள் அழைத்துச் சென்றார்கள். அதன் பின் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவனையில் ஒரு மாதம் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 05.09.2022ம் தேதி மூளகுமூட்டில் உள்ள ஜெப வீட்டிற்கு சென்று விட்டு வீட்டிற்கு வர வேண்டி மாலை 05.00 மணிக்கு அழகியமண்டபம் அரான்பிளைவுட் அருகில் மைக்மேல் வீட்டின் முன்பாக வடக்கில் இருந்து தெற்காக சாலையை கடக்க முற்பட்ட போது மார்த்தாண்டம் – தக்கலை சாலையில் மேற்கில் இருந்து கிழக்காக திடீரென ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் ஹர்சத் என்ற நபர் அதிகவேகமாவும், கவன இல்லாமலும் ஓட்டி வந்து என் மீது மோதியதில் எனக்கு வலது

கால், வலது கை, தலையில் பலமாக காயம் ஏற்பட்டது என்றும் சம்பவத்தை நேரில் பார்த்த குமார், பாலு மற்றும் விபத்தை ஏற்படுத்திய ஹர்சத் ஆகியோர் ஆம்புலன்ஸ் மூலம் தக்கலை மருத்துவனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது குற்றம் சுமத்தப்பட்ட நபரை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தற்போது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். என் மீது இடித்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் வாகன ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC.No. 902/2022 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜாண் திலிபோஸ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. ஈசாக் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.05.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது அழகிய மண்டபத்தில் குடியிருந்து வந்து கார்பெண்டர் வேலை செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியாது. கடந்த 05.09.2022ம் தேதியன்று மாலை 05.00 மணிக்கு முளகுமூடு – தக்கலை நோக்கி வந்த Honda Activa இரு சக்கர வாகனம் எனது அம்மா அன்னாள் மீது மோதியதில் எனது அம்மாவின் வலது கை உடைந்துவிட்டது. தலையில் அடிபட்டது. வலது காலில் பிராக்சர் ஏற்பட்டது. அதன் பின் என் அம்மாவை அங்கு அருகில் இருந்த குமார், பாலு மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஹர்சத் ஆகியோர் தக்கலை அரசு மருத்துவனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார்கள். எனக்கு எனது ஓனர் போன் மூலமாக தகவல் சொன்னதன் அடிப்படையில் நான் மருத்துவமனைக்கு சென்று என் அம்மாவை பார்த்தேன். அங்கு என் அம்மாவிற்கு முதலுதவி கொடுக்கப்பட்டது.

2. காவல் நிலையத்தில் இருந்து போலீசார் மருத்துவனைக்கு வந்து என் அம்மாவிடமும் என்னிடமும் விபத்து ஏவ்வாறு ஏற்பட்டது என்றும் காயங்கள் ஏற்பட்டது குறித்தும் விசாரித்து எழுதி கொண்டார்கள். அதில் நானும் எனது அம்மாவும் கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை மருத்துவனையில் வைத்து

போட்டேன். **புகாரில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 05.09.2022ம் தேதி என் அம்மா மூளகுமூட்டில் உள்ள ஜெப வீட்டிற்கு சென்று விட்டு வீட்டிற்கு வர வேண்டி மாலை 05.00 மணிக்கு அழகியமண்டபம் அரான்பிளைவுட் அருகில் மைக்மேல் வீட்டின் முன்பாக வடக்கில் இருந்து தெற்காக சாலையை கடக்க முற்பட்ட போது மார்த்தாண்டம் – தக்கலை சாலையில் மேற்கில் இருந்து கிழக்காக திடீரென ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் ஹர்சத் என்ற நபர் அதிகவேகமாவும், கவன இல்லாமலும் ஓட்டி வந்து என் அம்மாவின் மீது மோதியதில் என் அம்மாவிற்கு வலது கால், வலது கை, தலையில் பலமாக காயம் ஏற்பட்டது என்றும் சம்பவத்தை நேரில் பார்த்த குமார், பாலு மற்றும் விபத்தை ஏற்படுத்திய ஹர்சத் ஆகியோர் என் அம்மாவை ஆம்புலன்ஸ் மூலம் தக்கலை மருத்துவனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது குற்றம் சுமத்தப்பட்ட நபரை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தற்போது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் எழுதியுள்ள விவரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram.